# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,937/6 — 1970 දෙසැම්බර් 23 වැනි බදාදා — 1970.12.23**

14,937/6 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன].

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பி. 47/53.

### அமைச்சர் பணிகள் ஒதுக்கல் (விளைவாந்தன்மைய ஏற்பாடுகள்) சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

முன்னே நிதியமைச்சருக்கு ஒதுக்கிவிடப்பட்டிருந்த "அரசாங்க சேவைச் சகாய நிதி" என்னும் விடயமானது, 1946 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பு (அரசவைக் கட்டளையின்) 46 (4) ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆந் தேதிய 14,008/6 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒதுக்கல் மூலம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு இப்போது முதலமைச்சரினால் ஒதுக்கிவிடப்பட்டிருக்கின்றபடியாலும் :

அத்தகைய ஒதுக்கலின் விளைவாக எழுத்திலுள்ள ஒரு சட்டத்தில் திருத்தங்கள் செய்தல் அவசியமாயிருக்கிறபடியாலும் :

ஆகவே, முதலமைச்சர், சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், (385 ஆம் அத்தியாயமான) அமைச்சர் பணிகள் ஒதுக்கல் (விளைவாந்தன்மைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இதற்குற்ற அட்டவணையின் 1 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எழுத்திலுள்ள சட்டத்தை அவ்வட்டவணையின் 2 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் காட்டப்பட்டுள்ள விதமாகவும் அந்த அளவுக்கும் இக்கட்டளையின் மூலந் திருத்துகிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 23 ந் உ.

சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்கா,
முதலமைச்சர்.

### அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (434 ம் அத்தியாயமான) அரசாங்க சேவைச் சகாய நிதிக் கட்டளைச் சட்டம் | (அ) 3 (2), 15, 24 (2), 27 (1) ஆகிய பிரிவுகளில் "நிதியமைச்சர்" என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக "அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்" என்னும் வாக்கியஞ் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| | (ஆ) 26 (1), 26 (2) ஆகிய பிரிவுகளில் "திறைசேரிச் செயலாளர்" என்னும் வாக்கியந்தோன்றுமிடங்களிலெல்லாம் "நிரந்தரச் செயலாளர், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு" என்னும் வாக்கியஞ் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| | (இ) 2 (2), 3 (1) (அ), 3 (3), 9, 13 (2), (11), 22, 24 (1), 25 ஆகிய பிரிவுகளில் "திறைசேரியின் பிரதிச் செயலாளர்" என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக "ஓய்வூதியங்கள் பணிப்பாளர்" என்னும் வாக்கியஞ் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| | (ஈ) 17 ம் பிரிவில் "திறைசேரியின் பிரதிச் செயலாளர்" என்னும் வாக்கியந்தோன்றுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "ஓய்வூதியங்கள் பணிப்பாளர்" என்னும் வாக்கியஞ் சேர்க்கப்படுதல் வேண்டும். |

12–1116


இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.